දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල, )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය ) FHB/AYH/temp/Let 2024
எனது இல )
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය ) 23 /01/2024
திகதி )
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார் அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்று நிருபம் கடித இல:..01-03/2024

சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல சுகாதார நிறுவனங்களின் பணிப்பாளர்கள் / பொறுப்பு வைத்திய அதிகாரிகள்
பணிப்பாளர் - தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவகம்
சகல சுகாதார வைத்திய அதிகாரிகள்

**பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொண்ட வளர் இளம் பருவத்தினருக்கான தொடர்சேவை மற்றும் கவனிப்புகளை வழங்குதல்.**

இது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் "வளர் இளம் பருவத்தினருக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் (ASRH) தொடர்பான சேவைகளை வழங்குதல்" குறித்த 07.03.2011 திகதியிடப்பட்ட எண். 02-29/2011 மற்றும் 08.07.2015 திகதியிடப்பட்ட எண்: 01-25 / 2015 பொது சுற்றறிக்கைகளுக்கும், சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் 2016ம் ஆண்டு வெளியிடப்பட்ட "வளர் இளம் பருவத்தினருக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கிய (SRH) சேவைகளை வழங்கும் சுகாதார பணியாளர்களுக்கான வழிகாட்டுதல்கள்"என்ற கைநூலிற்கும் மேலதிகமாக இச்சுற்றறிக்கை வழங்கப்படுகின்றது.

தரமான முறையில் வழங்கப்படும் வளர் இளம் பருவத்தினருக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான சேவைகளானது, பதின்ம வயது கர்ப்பங்கள், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், மற்றும் தாய் மரணங்களை குறிப்பிடத்தக்களவு குறைக்கின்றது.

கர்ப்பத்தடை மற்றும் குடும்ப திட்டமிடல் சேவைகள் வளர் இளம் பருவத்தினருக்கு வழங்கும் வைத்தியர்கள் இச்சுற்றறிக்கைக்கு அமைவாக பிள்ளையின் நலன்களைக் மட்டுமே கருத்தில் கொண்டு ஒவ்வொருவருக்கும் பொருத்தமான வகையில், எப்போதும் தனித்தனியாக மதிப்பீடு செய்து இச்சேவைகளை வழங்க வேண்டும்.

மேலும் வளர் இளம் பருவத்தினருக்கு அவர்களது வயதுக்கு பொருத்தமான பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான சேவைகள், அவர்களின் அந்தரங்கத்தன்மை மற்றும் இரகசியம் பேணும் வகையில் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவே , குடும்ப திட்டமிடல் சேவைகளை பெற்றுக் கொண்ட வளர் இளம் பெண்களின் சுகாதாரம், நல வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்

வகையில், சேவை வழங்குநர்களால் கீழே பரிந்துரைக்கப்படும் மேலதிகமாக கூடுதல் தொடர் கவனிப்புகள் அவர்கள் வயது வந்தவர்கள் ( அதாவது அவர்களுக்கு ,18 வயதுக்கு மேல் ) ஆகும் வரை வழங்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

1. கர்ப்பத்தடை ஒன்றை பெற்றுக் கொண்ட அனைத்து வளர் இளம் பருவப் பெண்களுக்கும் கூடுதல் தொடர்கவனிப்புகள் வழங்கப்பட வேண்டும். இச்சேவையை பதிவு செய்து வழங்கும் அப்பிரதேச குடும்ப நல உத்தியோகத்தர், அவ் வளர் இளம் பெண் குடும்ப திட்டமிடல் முறையை ஏற்றுக்கொண்ட ஒரு மாதமளவில் , முதலாவது தொடர்கவனிப்பு வருகையை மேற்கொள்ள வேண்டும்.
2. குடும்ப நல உத்தியோகத்தர் அடுத்தடுத்த தொடர்கவனிப்புகளை மூன்று மாத இடைவெளிகளில் ஒரு சிகிச்சை நிலையத்தில் அல்லது அவ் வளர் இளம் பெண்ணின் வீட்டில அவர்கள் பாவிக்கும் குடும்ப திட்டமிடல் முறைக்கு ஏற்றவாறு மேற்கொள்ள வேண்டும்.
3. தொடர்கவனிப்பு வருகை / தரிசிப்பின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:

- வழங்கப்பட்ட குடும்ப திட்டமிடல் முறையை அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக பாவித்தல் மற்றும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஏதேனும் பக்க விளைவுகள் / பாதகமான விளைவுகள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு பாவிக்கும் வளரிளம் பருவ பெண்ணிற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுதல் வேண்டும்.
- கர்ப்பத்தடை பயன்படுத்துவது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அல்லது தம்பதிகள் சேர்ந்து வாழாத நிலைமைகளில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி (MOH) மற்றும் அவரது சுகாதாரப் பராமரிப்புக் குழுவும் குடும்பத் திட்டமிடலை தொடர வேண்டியது தொடர்பாக வளர் இளம் பருவ வயதுப் பெண் மற்றும் அவளது பெற்றோர் / பாதுகாவலரிடம் கலந்துரையாடி மறுமதிப்பீடு செய்ய வேண்டும். குடும்பத் திட்டமிடலை தொடர வேண்டியது அவசியமெனின், “வளர் இளம் பருவத்தினருக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் (ASRH) தொடர்பான சேவைகளை வழங்குதல்” தொடர்பாக 08.07.2015 திகதியிடப்பட்ட எண்: 01-25 / 2015 பொது சுற்றறிக்கையின் படி பெற்றோர் / பாதுகாவலரின் சம்மதம் பெறப்படுதல் வேண்டும்.
- குடும்பத் திட்டமிடலை பெற்ற வளர் இளம் பெண்ணிற்கு தீங்கேதும் ஏற்படா நிலை/ பாதுகாப்புறுதி வழங்குதல் தொடர்பாக கவனமெடுக்க வேண்டிய நிலை ஏதேனும் இருப்பின், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி (MOH) , சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கள உத்தியோகத்தருக்கு தெரிவிக்க வேண்டும் என்பதுடன் சேவை வழங்குதல், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கவனமெடுக்க வேண்டிய நிலை தொடர்பாக ஆவணப்படுத்த வேண்டும். மேலும் அவ் ஆவணங்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

4. எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் மற்றும் செய்யப்பட்ட தகவல் தொடர்புகளை ஆவணப்படுத்தி அவற்றின் பிரதிகளை வளர் இளம் பருவ வாடிக்கையாளரின் அந்தரங்கத்தன்மை மற்றும் இரகசியத்தை பேணும் வகையில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் உரிய குடும்ப நல உத்தியோகத்தர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

**குறிப்பு:** கர்ப்பத்தடை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஏதேனும் மருத்துவ பிரச்சனைகள் / பக்க விளைவுகள் / பாதகமான விளைவுகள் தேசிய குடும்ப திட்டமிடல் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி கையாளப்படுதல் வேண்டும். (ஹோர்மோன்

உட்செருகியினை பெற்றுக்கொள்ளல் மற்றும் அகற்றுதலில் ஈடுபடும் சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டுதல்கள், ஒருங்கிணைந்த விழுங்கும் கர்ப்பத்தடை மாத்திரையை வழங்குவதற்கான சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டுதல்கள், ஊசி மூலமான கர்ப்பத்தடையினை வழங்குவதற்கான சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டுதல்கள் போன்றவற்றை பின்வரும் இணைப்பில் பெறலாம் https://fhb.health.gov.lk/index.php/en/technical-units/family-planning-unit )

மேலதிக தகவல்களை பெறுவதற்கு குடும்ப சுகாதார பணியகத்தின் 0112699341 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு / ayhunitfhb@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

இச் சுற்றறிக்கை தொடர்பாக அனைத்து விடயங்களும் தங்கள் அதிகாரத்தின் கீழுள்ள பொருத்தமான அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் , மேலும் இந்த அறிவுறுத்தல்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும்.வளர் இளம் பருவ சிறுவர்களின் நன்மை மட்டும் கருதி அவர்களுக்கு சமத்துவமான வளர் இளம் பருவ நேய இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்கும் உங்கள் தொடர்ச்சியான ஆதரவு பெரிதும் பாராட்டப்படுகின்றது.

.............................................

வைத்தியர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள்:

- செயலாளர் , சுகாதார அமைச்சு
- சகல மாகாணங்களுக்குமான பிரதம செயலாளர்கள்
- சகல மாகாணங்களுக்குமான சுகாதார அமைச்சின் செயலாளர்கள்
- சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரகள் : பொது சுகாதார சேவைகள் மற்றும் மருத்துவ சேவைகள்
- சகல பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகங்கள்
- பிரதம சட்ட அலுவலர், சுகாதார அமைச்சு
- சகல சமுதாய மருத்துவ நிபுணர்கள் மாகாணம் / மாவட்டம்
- சகல தாய் சேய் நல வைத்திய அதிகாரிகள்
- தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- தலைவர், மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் துறைசார் நிபுணத்துவ கல்லூரி
- தலைவர், சமுதாய மருத்துவ துறைசார் நிபுணத்துவ கல்லூரி
- தலைவர், குழந்தை மருத்துவ துறைசார் நிபுணத்துவ கல்லூரி
- இலங்கைக்கான பிரதிநிதிகள் : WHO / UNFPA / UNICEF